# பதவி வெற்றிடங்கள்

# திட்டப் பணியாளர்களைச் சேர்த்துக்கொள்ளல்

## இலங்கை மகாவலி அதிகாரசபை

## விவசாயம், கால்நடை வளங்கள், காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## மாதுரு ஓயா வலது கரை அபிவிருத்தித் திட்டம் மற்றும் கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டம்

## (மாதுரு ஓயா திட்டக் காலம் 2026-2032, கிவுல் ஓயா திட்டக் காலம் 2026-2031)

முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் 02/2026ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைய மற்றும் உரிய அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்க மாதுரு ஓயா வலது கரை அபிவிருத்தித் திட்டம் மற்றும் கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றுக்காக முழுநேர ஒப்பந்த அடிப்படையில் திட்டப் பணியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்காகத் தகுதியான மற்றும் அர்ப்பணிப்புடன் செயற்படும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு பதவிக்கும் உரிய சம்பளமானது 02/2026ஆம் இலக்க 2026.03.28ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் IIஆம் இணைப்புப் பகுதியின் 02ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஆரம்ப தகுதிகள் மற்றும் அனுபவத் தேவைகள் I ஆம் இணைப்புப் பகுதியின் 02ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

உதவிப் பணியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்குப் 10-2025ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபம், 02/2026ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகள் பொருந்தும்.

### வெற்றிட விபரங்கள்

| இல. | விபரம் / சேவை இடங்கள் | சம்பள அளவு | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | திட்ட முகாமைத்துவ அலகு - வெலிகந்த | ● 02/2026ஆம் இலக்க MSD சுற்றுநிருபம்<br>● ஒத்துழைப்பு பணியாளர்களுக்கு 10/2025ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபம் | 33 |
| 02 | திட்ட முகாமைத்துவ அலகு - கிவுல் ஓயா (வலையம் L) | | 41 |
| 03 | திட்ட அமுலாக்கல் அலகு - வெலிகந்த | | 42 |

**பொது நிபந்தனைகள்**

✓ விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆங்கில மொழிப் புலமை, அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய அறிவு மற்றும் கணனி அறிவு என்பன அவசியமான தேவைகளாகும். இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களில் உள்ள முன் அனுபவம் மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

✓ தற்போது அரசாங்கம் அல்லது பகுதி அரசுத்துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர் / நிறுவனத் தலைவர் ஊடாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

**மேலதிக தகவல்களுக்கு:**

- **இலங்கை மகாவலி அதிகாரசபையின் (MASL) உத்தியோகபூர்வ இணையதளத்திற்குச் செல்லவும் - https://mahaweli.gov.lk/**
- **தொலைபேசி இல:- 0112 695972 / 0112 689743**

**(மேலே குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தயவுசெய்து நிதி அமைச்சின் இணையதளத்தைப் பார்க்கவும்)**

✓ விண்ணப்பங்களை 2026.10.29 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி உறையின் இடது பக்க மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மகாவலி அதிகாரசபை,**
**இல. 500, டி.பி. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு 10.**

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள். ஏதேனும் ஒரு வகையில் செல்வாக்குச் செலுத்துவது தகுதியீனத்திற்குக் காரணமாக அமையும் என்பதுடன் அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை மகாவலி அதிகாரசபை**

Scanned with CamScanner